செ.வெ.எண். 7

# செய்தி குறிப்பு

நாள். 3.11.2020

நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமையில் 20.11.2020 அன்று காலை 11.00 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது. தற்பொழுது கொரொனா (Covid-19) வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுத்தவும், பரவலை தடுக்கவும் அரசு நெறிமுறைகளுக்குட்பட்டு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இணையதளம் மூலம் நடைபெறவுள்ளது.

எனவே, விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின், 10.11.2020-ற்குள் தோட்டக்கலை இணை இயக்குநர், தபால்பெட்டி எண்.72, உதகை - 643001 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ (jdhooty@gmail.com) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகள் இக்கூட்டத்தில் இணையதளத்தில் கீழ்கண்ட இணைப்பின் மூலம் கலந்து கொள்ளலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

https://meet.google.com/coe-ypyi-krw

இணையதளத்தின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இம்மாவட்ட அனைத்து அலுவலர்களும் கலந்து கொள்வதால், விவசாயிகள் விவசாய சம்பந்தமாக குறைகள் இருப்பின் இணையதளத்தின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கலாம் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
உதகமண்டலம்.

2/11

C7-2-2018-Com-2

2/11/2020